வேலை பெறுகின்றனர்.

# V. நிலச்சீர்திருத்தங்கள்

## [Land Reforms]

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களின் தொடர்புகளைச் செம்மைப்படுத்தவும், நிலவுடைமையை நெறிபடுத்தவும் நிலச் சீர்திருத்தங்கள் தேவைப் பெறுகின்றன நாடு விடுதலை பெற்றவுடன் ஜமீன்தாரி முறையை ஒழித்தது ஒரு பெரிய நிலச்சீர் திருத்தமாகும். ஆனால் அது நிலச்சீர்திருத்தத்தின் தொடக்கமாக அமைந்ததே தவிர, வேளாண்மையிலுள்ள பல்வேறு நிலச் சிக்கல்களையும் தீர்ப்பதாக இல்லை இப்பொழுதுள்ள நிலச்சிக்கல்கள் நிலத்தைக் குத்தகைப் பெற்று சாகுபடி செய்பவர்களுக்குப் பாதுகாப்பு தருவது; நிலமற்ற விவசாயிகளுக்கு நிலமளிப்பது, துண்டாடப்பெற்ற நிலத்தை இணைப்பது கூட்டுப்பண்ணைகளை அமைப்பது ஆகியவற்றை ஒட்டி எழுகின்றன.

**தற்போதைய நிலவுடைமை முறையின் குறைகள்:** இந்தியாவில் இருக்கின்ற நிலவுடைமை முறையில் கீழ்க்கண்ட குறைகள் இருப்பதனைத் திட்டக்குழு சுட்டிக்காட்டுகின்றது.

1. அரசுக்கும், உண்மையான நிலச்சாகுபடியாளர்களுக்கும் இடையில் எண்ணற்ற இடைத்தரகர்கள் இருக்கின்றனர்.

2. சாகுபடி நிலத்தில் பெரும்பகுதி குத்தகை முறையில் இருக்கின்றது.

3. எண்ணற்ற சிறு சாகுபடியாளர்களின் குத்தகைக் காலம் உறுதியாக இல்லை. கடன், நில அடமானம், ஆகிய வற்றினால் விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்யும் நிலத்தின் உரிமை தாங்கள் கைகளில் இல்லாமல் அல்லற்படுகின்றனர்.

4. குத்தகை வாரம் அதிகமாக இருக்கின்றது. இதனால் சிறியவிவசாயிகள் வாரம்போக எச்ச வருவாய் மிகுதியாக இன்மையால் அல்லற்படுகின்றனர்.

5. சிறிய, துண்டாடப்பட்ட நில அமைப்புகளினால் சாகுபடியில் புதிய முறைகளைப் பின்பற்றவோ, கருவிகளைக் கையாளவோ, உரிய வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன.

6. நிலப்பகிர்வில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. பெரும்பாலான விவாயிகள் நிலமே இல்லாமலோ, குறைவான நிலத்தை வைத்துக்கொண்டோ வாழ்க்கை நடத்துகின்றனர். இதனால் இவர்களுக்கு உழைப்பதில் ஊக்கம் பிறக்கவில்லை.

7. விவசாயிகளுக்கென்று சரியான அமைப்பு முறை இல்லை.

நிலச் சீர்திருத்தங்களின் நோக்கங்கள்: இந்தியாவில் நிலவுடைமை-உரிமை-சீர்திருத்தங்களின் தேவையை வேளாண்மை முன்னேற்றத்திற்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் அமைத்த ஒவ்வொரு குழுவும் சுட்டிக்காட்டியது. எடுத்துக்காட்டாக, டாக்டர் ஜே. சி. குமரப்பாவின் தலைமையில் அமைந்த வேளாண்மை சீர்திருத்தக்குழு [The Agrarian Reforms Committee] எல்லா இடைத்தரகர்களையும் நீக்க வேண்டுமென்றும், கிராமப் பொருளாதாரத்தில் சுரண்டலுக்கு இடமிருக்கக் கூடாதென்றும் வலியுறுத்தியது.

இந்தியாவில் நிலச் சீர்திருத்தங்களைக் கீழ்க்கண்ட நோக்கங்களோடு மேற்கொள்ள வேண்டுமென அறிஞர்கள் கருதுகின்றனர்.

1. அரசுக்கும் உழவர்களுக்கும் இடையிலிருக்கின்ற இடைத்தரகர்கள் முறையை அகற்ற வேண்டும்.

2. உழுபவர்களுக்கு, அவர்கள் கட்டுப்பாட்டிற்கு உள் ளிருக்கும், நில உடமை உரிமையை வழங்க வேண்டும்.

3. வேளாண்மையைப் புத்தாக்கம் செய்யும் வகையிலும், நேரடியாக வேளாண்மை செய்யாமல் தூரத்திலிருந்து கொண்டு சுரண்டுகின்ற நிலக்கிழார் உடைமை முறையைக் கட்டுப்படுத்தும் வகையிலும் நில உச்சவரம்பைச் செயல் படுத்த வேண்டும்.

4. நில உரிமை ஆவணங்களை [Records] குத்தகைதாரர் கள், வாரதாரர்கள், பங்குதாரர்கள் ஆகியோரின் உரிமைகள் வெளிப்படும் வகையிலும், பாதுகாப்புக் கிடைக்கும் வகையி லும் மாற்றியமைக்க வேண்டும்.

5. புதிய வேளாண்மைத் தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தும் வகையில் துண்டுதுண்டாக இருக்கின்ற நிலங்களை இணைக்க வேண்டும்.

6. சமுதாய நீதியை நிலை நாட்டுவதாக இருக்க வேண்டும்.

7. நில உடைமையாளர்களுக்கும், குத்தகைக்காரர்களுக் கிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் நியாயமான குத்தகைத் தொகையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

8. நில உச்சவரம்புச் சட்டத்தை திறமையாகச் செயல் படுத்துவதன் மூலமாக உபரி நிலத்தை நிலமற்ற விவசாயி களுக்கு வழங்க வேண்டும்.

9. கூட்டுறவுப் பண்ணை முறையை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும்.

நிலச் சீர்திருத்தங்களின் மூலம் இன்றைய நில உடமை முறையிலிருக்கும் குறைகளைப் போக்கி, உழுபவர்களுக்கே நிலத்தைச்சொந்தமாக்கி, வேளாண்மை வளர்ச்சிக்கு வேண்டிய அடித்தளத்தை அமைத்துத்தர விரும்புகின்றோம்.

1. *நிலக்குத்தகை சீர்திருத்தச் சட்டங்கள்:* குத்தகைக்கு நிலத்தை பெற்றுச்சாகுபடி செய்கின்ற முறை நீண்டகாலமாக இருக்கின்றது. நிலம் சிலரின் உடைமையாக இருக்கின்றது. நிலமற்ற விவசாயிகள் எண்ணிக்கையில் பலராக உள்ளனர். ஆதலால் போட்டி போட்டுக்கொண்டு நிலத்தைக் குத்தகைக் குப் பெறுகின்றனர். இதனால் குத்தகையை நிர்ணயிப்பதில் நிலக்கிழாரின் கை ஓங்குகின்றது. மேலும் பெரும்பாலான

வேளைகளில் நிலக்குத்தகை பதிவுசெய்யப் பெறுவதில்லை. நிலக்கிழாரின் விருப்பம்போல் குத்தகை மாற்றப் பெறலாம். இதனால் குத்தகையாளருக்கு நிலவளத்தைப் பெருக்கவோ, முழு மூச்சாக உற்பத்தியில் ஈடுபடவோ தூண்டுதல் கிடைப்பதில்லை. இத்தகைய குறைகளைப்போக்க ஆங்கிலேயர்களின் ஆட்சிகாலத்திலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றன

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னால் நிலக்குத்தகையை நெறிப்படுத்தக் கொண்டு வந்த சட்டங்களைத் தொகுத்துக் கூறலாம். முதலாவதாக, குத்தகைப் பாதுகாப்புச் சட்டங்கள் பம்பாய், பஞ்சாப், ஹிமாசலப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நிறைவேற்றப் பெற்றன. அவற்றின் படி ஒழுங்காகக் குத்தகை செலுத்தி வருகின்ற விவசாயிகளை நிலத்தைவிட்டு வெளியேற்ற முடியாது. இதனால் நிலத்தின் மீது ஒரு பிடிப்போடு விவசாயிகளால் பாடுபட முடியும். இரண்டாவதாக, நியாயமான குத்தகையை வரையறுக்கின்ற சட்டங்கள் கொண்டுவரப் பெற்றன. பஞ்சாப், ஹைதராபாத், ராஜஸ்தான், மாநிலங்களில் குத்தகைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பெற்றது. மூன்றாவதாக, குத்தகையாளர்கள் நிலத்தை வாங்குவதற்கு வாய்ப்பளிக்கின்ற சட்டங்கள் பம்பாய், பஞ்சாப், டில்லி, ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், ஹைதராபாத் ஆகிய மாநிலங்களில் கொண்டுவரப்பெற்றன. அவற்றின் படி ஒரு நிலத்தைத் தொடர்ந்து சாகுபடி செய்கின்ற குத்தகையாளருக்கு அந்த நிலத்தை வாங்கும் உரிமை கிடைக்கின்றது. நான்காவதாக, நிலையான ஆக்கப்பணிகளை மேற்கொள்ள குத்தகையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கிடைக்கச் சில மாநிலங்கள் சட்டமியற்றியுள்ளது.

நில உச்சவரம்பு மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபடுகின்றது. பஞ்சாப், ஹரியானாவில் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ராஜஸ்தானில் 22 முதல் 50 ஏக்கர்கள், மேற்கு வங்காளத்தில் 25, கேரளாவிலும், தமிழ் நாட்டிலும் 15 ஏக்கர்கள் மாநில அரசுகள் சூழ்நிலைக்கேற்ப உச்சவரம்பை நிர்ணயிக்கின்றன. தமிழக அரசு உச்சவரம்பை 10 ஸ்டாண்டர்டு ஏக்கர்களாக்க எண்ணியுள்ளது. 1972-வது ஆண்டு தமிழ் நாடு நிலச் சீர்திருத்தச் சட்டதிருத்தத்தின் ஷரத்துபேர் கொண்ட, ஒரு குடும்பம் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வைத்திருக்கலாம். மேய்ச்சல் மற்றும் பால்பண்ணை நிலங்களுக்கான விதி விலக்குகள் நீக்கப்பட்டன.

காரணங்கள்: நில உடமைக்கு உச்சவரம்பு கட்டுவது இன்றியமையாத ஒன்றென்று கருதுகின்றவர்கள் கூறுகின்ற காரணங்களைத் தொகுத்துக் கூறலாம்.

1. சமுதாய நீதியை நிலைநாட்ட நில உச்சவரம்பு தேவை. உழைக்காதவர்களிடம் மிகுதியாக நிலமும், உழைப்பவர்கள் நிலமற்றவர்களாகவும் இருக்கின்ற கிராம சமுதாயத்தில் பெரும் நிலக்கிழார்கள் செல்வாக்குப் பெற்றவர்களாக, கிராம சமுதாயத்தை ஆட்டிப்படைப்பவர்களாக இருக்கின்றனர். எல்லோரும் சமமென்பதை உறுதியாக்க நிலவுடைமையிலுள்ள ஏற்றத்தாழ்வைக் குறைப்பது தேவையாகும்.

2. விவசாயிகளின் நிலப்பசியைத் தீர்க்க வேண்டும். எல்லோரும் கொஞ்சமாவது நிலம் வைத்துக் கொள்ள விரும்புகின்றனர். சிலரிடம் மிகுதியாக நிலமிருப்பதைக் காணும் நிலமற்ற விவசாயிகளின் மனதில் நிலப்பசி காட்டுத்தீயாக வளர்

கின்றது. இந்தப் பசி, வெறியாக மாறி, 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்று கிளர்ச்சியாக வெடிப்பதற்கு முன்னால், நில உச்சவரம்புக்கு மேலிருக்கும் நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதே அறிவுடைமை என்று கருதப்பெறுகின்றது.

3 வருவாய் ஏற்றத்தாழ்வைக் குறைக்க வேண்டுமானால் நில உச்சவரம்பைக் கொண்டு வரவேண்டும். கிராமங்களில் கிடைக்கின்ற முதன்மையான வருவாய் நிலத்திலிருந்தே வருகின்றது. ஆதலால் நிலத்தின் ஏற்றத்தாழ்வு இருக்கும் வரை, கிராம சமுதாயத்தின் வருவாயிலும் மிகுந்த ஏற்றத்தாழ்வு இருக்கும்.

4. உற்பத்தியைப் பெருக்க இது ஏற்ற வழி வகுக்கும். பெரிய பண்ணைகளை அமைத்து, வேளாண்மை எந்திரமயமாக்க நம்மிடம் தக்க அளவில் முதல் இல்லை. ஆதலால் செறிவுமுறைச் சாகுபடியின் [Intensive Farming] மூலமாகத்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். இதற்குச் சிறிய பண்ணைகளே தேவை. நில உச்சவரம்புச் சட்டம் சிறிய பண்ணைகளைத் தோற்றுவிக்க உதவும்.

5. நிலத்தைப் பயன்படுத்துவதில் சரியான மாற்றங்களைச் செய்ய நில உச்சவரம்பு வழி வகுக்கும். கூட்டுறவு பண்ணைகள் அமைக்க நில உச்சவரம்புச் சட்டம் துணை செய்யும் எச்ச நிலத்தைக் கூட்டாகச் சாகுபடி செய்யும்படி தூண்டலாம்.

நில உச்சவரம்புச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் சில காரணங்களைக் கூறுகின்றார்கள். (1) நில உச்சவரம்புச் சட்டம் பெரிய பண்ணைகள் அமைவதற்கு எதிராகச் செயல்படும். (2) நமது நாட்டில் நில உச்ச வரம்பைவிட, குறைந்த அளவு எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாமென்ற 'அடிமட்ட வரம்பு' [Flooring] மூலம் நிலம் துண்டாடப்படுவதைத் தடுப்பது தேவையாகும். (3) நில உச்சவரம்பின் மூலம் நிலமற்ற விவசாயிகளின் நிலப்பசியைத் தீர்க்குமளவிற்கு நிலம் கிடைக்காது (4) எச்ச நிலத்தை எடுக்க, அரசளிக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை அரசுக்குப் பாரமாக இருக்கும். (5) நகர வருவாய்க்கு உச்ச வரம்பு கட்டாமல் நிலவுடைமைக்கு மட்டும் உச்சவரம்பை நிர்ணயிப்பது அறமாகாது.

ஆனால் நில உச்சவரம்பிற்கு எதிராகக் கூறப்பெறும் காரணங்களில் பெரும்பாலானவை ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல. ஜப்பானின் எடுத்துக்காட்டு சிறிய பண்ணைகளின் மூலம் மிகுதியாக விளைய வைக்கமுடியுமென்பதைக் காட்டுகின்றது.

நிலத்தை துண்டாடுவதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவரு வது தேவையாகும். அதற்காக ஏற்றத் தாழ்வைப் பெருக்கு மளவிற்குள்ள நிலவுடைமை முறையை ஏற்றுக்கொள்ள இயலாது. நில மற்றோர் அனைவரின் நிலப்பசியைப் போக்கா விட்டாலும் பலரின் பசியைப் போக்குமென்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அரசு இழப்பீட்டுத் தொகைக்கு கடன் பத்திரங்களாக வழங்கலாம். நகர மக்களின் சொத்துக் களுக்கும் வருவாய்க்கும் வரம்பு கட்ட இப்பொழுது அரசு நட வடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றது.

*சிக்கல்கள்:* நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் உள்ளன.

முதலாவதாக, எதிர்காலத்தில் மிகுதியாக நிலம் வாங்கு வதைத் தடை செய்வது எளிதாக இருக்கும். ஆனால் முன்பே நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தைப் பெறுவது சிக்க லான செயலாக இருக்கும்.

இரண்டாவதாக, நில உச்ச வரம்புச் சட்டம் வருவதை அறிந்தவுடன் பெரிய நிலக்கிழார்கள் தங்களிடமுள்ள எச்ச நிலத்தைக் கைமாற்றி விடுகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்தி, எச்ச நிலத்தைப் பெற்று பகிர்ந்தளிப்பதில் பல தொல்லைகள் உள்ளன.

மூன்றாவதாக, உச்ச வரம்பு நில அளவை நிர்ணயிப்பதி லும் கருத்து வேறுபாடு எழுகின்றது. முதல் ஐந்தாண்டுத் திட் டத்தில் 'குடும்ப உடமை' (Family Holding) நில அளவைப் போல எத்தனை மடங்கு உச்சமாக வைத்துக் கொள்ளலா மென்பதை நிர்ணயிக்கலாமென்று கூறினர். குடும்பத்திற்கு வேண்டிய நில அளவை, சாகுபடி செய்வதற்கு ஏற்ற அளவில் உள்ளதா என்றும், போதுமான வருவாய் கிடைக்கக் கூடியதா வென்றும் பார்க்க வேண்டுமென்று கூறினர். குடும்பத்திற்கு ரூ. 1200 நிகர வருவாய் தரும் நிலம் 'குடும்ப உடமை நில மாகக்' கருதப்படலாமென்று குறிப்பிட்டனர். இரண்டாம் திட்டம் இத்தகைய குடும்ப அளவு நிலத்தைப்போல மூன்று மடங்கு வைத்துக் கொள்ள அனுமதிக்கலாமென்று கருதியது. ஆனால் நிலம் வளத்தால் வேறுபடுவதாலும், வேளாண்மை வருவாய் நிலையற்றதாக இருப்பதாலும், நில உச்சவரம்பை நிர்ணயிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் தோன்றுகின்றது.

நான்காவதாக, எந்தகைய நிலங்களுக்கு நில உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்களிப்பதென்ற சிக்கல் தோன்றுகிறது. அளிக்கின்ற விதிவிலக்கை பெரிய நிலக்கிழார் கள் தவறாகப் பயன்படுத்தி உச்சவரம்புச் சட்டத்தை செல்லாக்காசாக மாற்றும் ஆபத்து ஏற்படலாம்.

ஐந்தாவதாக, எச்சமாக இருந்து பெறுகின்ற நிலத்திற்கு எப்படி இழப்பீடு வழங்குவதென்பதையும், நிலமற்றவர்களிட மிருந்து எப்படி நிலத்திற்குரிய கிரயத்தை பெறுவதென்பதை யும் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

ஆறாவதாக, எச்ச நிலத்தைப் பகிர்ந்தளிப்பதால் மட்டும் வேளாண்மை உற்பத்தி கூடாது. புதிதாக நிலம் பெறுகின்ற விவசாயிகளுக்குச் சாகுபடி செய்வதற்குத் தேவையான பணம் கடனாகக் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

சட்டங்களும், முன்னேற்றமும்: பல மாநிலங்களுக்கு நில உச்சவரம்புச் சட்டத்தை இயற்றிச் செயல்படுத்துகின்றனர். இதுவரை இருபது இலட்சம் ஏக்கர் நிலத்தை உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் பெற்று மாநில அரசுகள் பகிர்ந்தளித்துள் ளன. மேற்கு வங்காளத்தில் 7.77 இலட்சம் ஏக்கரும், ஜம்மு காஷ்மீரில் 4.5 இலட்சம் ஏக்கரும், பஞ்சாபில் 3.69 இலட்சமும், உத்திரப்பிரதேசத்தில் 2.23 இலட்சமும் மஹாராஷ்டிரத்தில் 1.63 இலட்சமும், மத்தியபிரதேசத்தில் 67,000 ஏக்கரும், குஜராத்தில் 39,000 ஏக்கரும், அஸ்ஸாமில் 34,000 ஏக்கரும், தமிழகத்தில் 20,000 ஏக்கரும் உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது

## VII. வேளாண்மையை எந்திரமயமாக்குதல்

இந்திய வேளாண்மையின் உற்பத்தியை உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. உற்பத்தித்திறனுக்கும் பயன்படுத்துகின்ற கருவிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. ஆதலால் நமது உழவர்கள் தற்பொழுது பயன்படுத்துகின்ற கருவிகளைப் பற்றியும், அவற்றில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களைப் பற்றியும், ஆராய வேண்டியது தேவையாகின்றது.

இந்திய உழவர்கள் மிகவும் பழமையான கருவிகளையே பயன்படுத்துகின்றனர். இவை திறமையோடு உற்பத்தி செய்ய எந்த வகையிலும் ஏற்றவையல்ல. மற்றைய நாடுகளில் பயன்படுத்துகின்ற கருவிகளோடு ஒப்பிட்டால் நமது கருவிகள் மிகவும் பிற்போக்கானவை. ஆகையால் உழவர்களின் உற்பத்தித் திறனை உயர்த்த புதிய வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டுமென்பதைப் பொருளியலறிஞர்கள் வற்புறுத்துகின்றார்கள்.

விளக்கம்: எந்த அளவு கருவிகளையும், எந்திரங்களையும் யன்படுத்துவது என்பதில் கருத்து மாறுபாடுகள் காணப்பெறுன்ற ஒருபிரிவினர் இந்திய வேளாண்மையை எந்திரமயமாக்க வண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றனர் மற்றொரு பிரினர் எந்திர மயமாக்குதல் நடைமுறைச் சாத்தியமில்லையன்று கூறுகின்றனர். உண்மையை உணர, எந்திரமயமாக்குதல் என்றால் என்னவென்பதையும், அதனைப் பற்றிய வகைபான கருத்துக்களையும் அறிந்து கொள்ளவேண்டும்.

வேளாண்மையில் மனித சக்திக்கும் கால்நடை சக்திக்கும் உதவ மிகுதியாக எந்திரங்களைப் பயன்படுத்துவதையோ மனித சக்திக்கும், கால்நடை சக்திக்கும் பதிலாக வேறு மின்விசை போன்ற சக்தியால் இயங்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதையோ, எந்திரமயமாக்குதல் என்று கூறுகிறோம். இதன் மூலமாக, உழுவதிலிருந்து, விளைந்த பொருளை விற்கின்ற வரை ஒவ்வொரு விவசாய வேலைக்கும் எந்திரத்தைப் பயன்படுத்துவதையே கூறுகின்றோம்.

மறுப்புகள்: எந்திர மயமாக்குதல் நடைமுறைச் சாத்தியமில்லையென்று கூறுகின்றவர்கள் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறுகின்றார்கள்.

முதலாவதாக, நமது நாட்டில் பெரிய விவசாயப் பண்ணைகள் இல்லை. இருக்கின்ற நிலம் துண்டாடப்பட்டு கூறு போடப்பட்டு சிறிய சிறிய துண்டு நிலங்களாக இருக்கின்றது. பெரிய பண்ணையாக இருந்தால் எந்திரங்களைப் பயன்படுத்துவது சாத்தியமாகும். எந்திர மயமாக்கப்பெற்ற நாடுகளைக் கவனித்தால் இந்த உண்மை விளங்கும். அந்த நாடுகளில் மிகவும் பெரிய பண்ணைகள் உள்ளன. சோவியத் ரஷ்யாவில் ஒரு பண்ணையின் சராசரி பரப்பளவு 1,600 ஏக்கர். கனடாவிலுள்ள பண்ணைகளின் சராசரி அளவு 234 ஏக்கர். அமெரிக்காவில் சராசரி அளவு 145 ஏக்கர். நமது நாட்டில் நிலத்தின் அளவு சிறியதாகவே இருக்கின்றது. மேற்கு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் விவசாய நிலத்தின் சராசரி அளவு மூன்று ஏக்கர் பம்பாய் மாநிலத்தில் 12 ஏக்கர். இந்த அளவு சிறியதாக இருக்கும் பண்ணைகளில் எந்திரத்தைப் பயன்படுத்த இயலாது

இரண்டாவதாக, நமது நாட்டில் இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கின்றது. வேளாண்மையில் ஈடுபட்டவர்களுக்கு ஆண்டில் பாதி நாட்கள்தான் வேலை

இருக்கின்றது. இந்த நிலையில் எந்திரங்களை பயன்படுத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியாகும். எந்திரங்களைப் பயன்படுத்துவதால் வேலை இழப்பவர்களுக்கு வேறு வேலை கொடுப்பதும் சாத்தியமாக இல்லை. பேரைநாடு களில் உழைப்பதற்கு ஆட்கள் கிடைக்காததால் வேளாண்மையை எந்திரமயமாக்கினார்கள் என்பதை மறுக்க முடியாது. நமது நாட்டில் குறைந்த கூலி வாங்கிக் கொண்டு உழைக்க அதிக மக்கள் காத்திருக்கிறார்கள்.

மூன்றாவதாக, எந்திரமயமாக்குதலின் மூலமாக உற்பத்தி திட்டவட்டமாகக் கூடுமெனக் கூறமுடியவில்லை என்று சிலர் கூறுகின்றனர். நமது நாட்டிலுள்ள சிக்கல் குறைந்த ஆட்களைக் கொண்டு அதிகம் விளைய வைக்க வேண்டுமென்பதில்லை. இருக்கும் குறைந்த அளவு நிலத்தில் எப்படி அதிகம் விளைய வைக்கமுடியுமென்பது தான் இன்றைய சிக்கல். இதனைத் தீர்க்க எந்த அளவு எந்திரங்களைப் பயன்படுத்த முடியுமென்பது கேள்விக்குறியதாகும்.

நான்காவதாக, இந்தியாவில் கால்நடைகள் ஏராளமாக இருக்கின்றன. எந்திரமயமாக்கினால் அவற்றைப் பயன்படுத்த முடியாமல் போகலாம். கால்நடைகளின் எண்ணிக்கைகளைத் திடீரென்று குறைப்பதும், நடக்கக் கூடிய செயலல்ல.

ஐந்தாவதாக, எந்திரமயமாக்க அதிக மூலதனம் தேவை, நமது நாட்டு விவசாயிகளிடம் எந்திரங்களில் முதலீடு செய்கின்ற அளவிற்குப் பணம் இல்லை. நம்மிடம் போதுமான அளவு இரும்பும் எந்திரமயமாக்குவதற்கு வேண்டிய பிற பொருட்களும் இல்லாமையால் இவற்றை நாம் இறக்குமதி செய்ய வேண்டி வரும் இதற்காகும் முதலை எப்படிப் பெறுவதென்பது பெரும் சிக்கல்.

ஆறாவதாக, எந்திரங்களையும், அவற்றிற்கு வேண்டிய கருவிகளையும் உற்பத்தி செய்யும் நிலையில் நாம் இல்லையென்பது கவனிக்கத்தக்கது. அதற்கான பொறியியல் வளர்ச்சியை நாம் இது வரை பெறவில்லை.

ஏழாவதாக, அதிக கல்வியறிவில்லாத கிராம மக்களால் எந்திரங்களின் அமைப்பைப் புரிந்துகொண்டு இயக்கமுடியுமா வென்பதும் சந்தேகமே.

மேற்கண்ட காரணங்களைக் காட்டி இந்திய வேளாண்மையை எந்திரமயமாக்குதல் சாத்தியமில்லையென்று வாதிடுகின்றார்கள்.

இயலும்: ஆனால் வேளாண்மை எந்திரமயமாக்குதலின் மூலமாகத்தான் உற்பத்தியைப் பெருக்க முடியுமென்பவர்கள் சில காரணங்களைக் கூறுகின்றனர்.

எந்திரமயமாக்குதல் என்பதனை நீண்டகாலக்கண்ணோட்டத்துடனும், குறுகிய காலக் கண்ணோட்டத்துடனும் ஆராய வேண்டும். நீண்டகாலக் கண்ணோட்டத்தில் எதிர்கால இந்தியாவில் வேளாண்மைக்குரிய இடத்தையும், அதில் எந்திரங்கள் ஆற்ற வேண்டிய பணியையும் வரையறுக்க வேண்டும். குறுகிய காலக் கண்ணோட்டத்தில் இன்றுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப இன்றுள்ள நிலையில் எந்திரமயமாக்குதல் எந்த அளவு சாத்தியமானதென்பதை ஆராய்ந்து அறிய வேண்டும்.

நீண்டகாலக் கண்ணோட்டத்தில், இந்தியாவில் வாழ்க்கைத் தரம் உயர வேளாண்மை விரைந்த வளர்ச்சி பெற வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கின்றோம். இதற்காக, கூட்டுறவுப் பண்ணை முறையை நமது இலட்சிய வழிமுறையாக ஏற்றுக்கொண்டுள்ளோம். நில ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலமாகவும், பண்ணையின் அளவைப்பெரிதாக்க முயல்கின்றோம். ஆதலால் நாடெங்கும் பெரும் பண்ணைகள் தோன்ற சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. இதனால் எந்திரமயமாக்குதல் எதிர் காலத்தில் தேவையான ஒன்றாக இருக்கும்.

மேலும் எந்திரமயமாக்க பெரிய பண்ணைகள்தான் தேவை என்பதில்லை. இருபது முதல் ஐம்பது ஏக்கர் நிலமுள்ள பண்ணைகளில் கூடப் பயன்படுத்தத் தக்க சிறிய டிராக்டர்களும் வேறு எந்திரங்களும் உள்ளன. ஆதலால் நிலத்தினளவு குறைவாக இருப்பது எந்திரமயமாக்க ஒரு தடையாக இருக்காது.

எந்திரமயமாக்க வேண்டுமென்பவர்கள் இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகும் என்பதையும் மறுக்கின்றனர். எந்திரமயமாக்குவதன் மூலமாகப் புதிய வேலை வாய்ப்புக்கள் ஏற்படும். நாட்டில் செல்வம் பெருகுவதால் பல துணைத் தொழில்களைத் தொடங்குவார்கள். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

எந்திரமயமாக்குதலால் உற்பத்தித்திறன் குறையாதென்பதை ஜப்பானியர்களின் சாதனை காட்டுகின்றது. அங்கு நல்ல விளைச்சல் இருக்கின்றது. இதிலிருந்து எந்திரமயமாக்குதல் உற்பத்தியைப் பெருக்குமென்பது தெரிகின்றது.

கால்நடைகள் மிகுதியாக இருப்பதால் எந்திரமயமாக்குதல் தேவையில்லை என்ற கருத்தையும் மறுக்கின்றனர். நமது நாட்டுக் கால்நடைகளில் பெரும்பாலானவை பொருளியல் அடிப்படையில் நாட்டுக்குப் பாரமாகவே இருக்கின்றன. ஆதலால் அவற்றைத் திட்டமிட்டுச் சிறிது சிறிதாகக் குறைக்க வேண்டும் இதற்கு எந்திரமயமாக்குதல் உறுதுணையாக இருக்கும்.

நாம் கனரகத் தொழில்களை அமைத்துக்கொண்டிருக்கிறோம். பொறியியல் தொழிலும் வளர்கின்றது. ஆதலால் வேளாண்மை எந்திரங்களை உருவாக்குவது முடியாத செயலல்ல. ஆதலால் நீண்டகாலத் திட்டத்தின் மூலமாக படிப்படியாக இந்திய வேளாண்மையை எந்திரமயமாக்குதல் இயலும் என்று கூறலாம்.

உடனடியாகவும் சில இடங்களில் எந்திர மயமாக்குதல் தேவையாகின்றது. சில இடங்களில் மண்ணை மாற்றியாக வேண்டியுள்ளது. வேறுசில இடங்களில் களை மண்டிக்கிடப்பதால் வேளாண்மை செய்ய இயலவில்லை. வேறு சில இடங்களில் போதுமான வேலையாட்கள் கிடைப்பதில்லை. இத்தகைய இடங்களில் உடனடியாக எந்திரங்களைப் பயன்படுத்தலாம்.

முடிவுரை: மொத்தமாக எந்திரமயமாக்குதலே கூடாது என்றோ, உடனடியாக இந்திய வேளாண்மையை எந்திரமயமாக்க வேண்டுமென்றோ கூற முடியாது. இரண்டுக்கும் நடுப்பட்ட ஒரு வழியின் மூலமாக தீமைகளை அகற்றிச் சிறிது சிறிதாக எந்திரமயமாக்க முயலவேண்டும். வாய்ப்புள்ள இடங்களில் முதலில் எந்திரங்களைப் பயன்படுத்தி, அவற்றின் விளைவுகளைக் காணவேண்டும். அனுபவத்தின் அடிப்படையில் மற்ற இடங்களுக்கு விரிவு படுத்தவேண்டும்.

உழவர்கள் தனியாகவோ மொத்தமாகவோ எந்திரங்களை வாங்கிப் பயன்படுத்த ஊக்கமூட்ட வேண்டும். இதற்காக உழவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்கலாம்.